


நேற்று முன்தினம் (24.04.2025) சென்னை தலைமைச் செயலகத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டை முன்னிட்டு அமைக்கப்பட்ட "தொலைநோக்குச் சிந்தனையாளர் கலைஞர்" எனும் குழுவினரால் தயாரிக்கப்பட்ட நூற்றாண்டு சிறப்பு மலர் புத்தகத்தினை ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் / குழுவின் தலைவர் இ.பெரியசாமி, சமூக நலன் மகளிர் உரிமைத் துறை அமைச்சர் / குழுவின் இணைத் தலைவர் பி. கீதா ஜீவன் ஆகியோர் வெளியிட்டார்கள். இந்நிகழ்வில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை முதன்மைச் செயலாளர் ப.செந்தில்குமார், "தொலைநோக்குச் சிந்தனையாளர் கலைஞர்" குழுவின் உறுப்பினர்கள் நீதியரசர் அக்பர் அலி (ஓய்வு), கவிஞர் மனுஷ்யபுத்திரன், கவிஞர் ரவி சுப்பிரமணியன், முனைவர் இன்னாசிமுத்து (காணொலி வாயிலாக) மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### நவீன தமிழ்நாட்டை உருவாக்கிய

# தலைவர் கலைஞர் தமிழ்நாட்டு மக்களின் உயர்வில் என்றும் வாழ்வார்!

### கும்பகோணத்தில் "கலைஞர் பல்கலைக்கழகம்" அமைவது குறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் கருத்து!

சென்னை, ஏப்.26-

கும்பகோணத்தில் "கலைஞர் பல்கலைக்கழகம்" அமைவது குறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில், "நவீன தமிழ்நாட்டை உருவாக்கிய தலைவர் கலைஞர் அவர்கள் தமிழ்நாட்டு மக்களின் உயர்வில் என்றென்றும் வாழ்வார்" என்று பதிவிட்டுள்ளார்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பெயரில் கும்பகோணத்தில் பல்கலைக்கழகம் அமைக்கப்படும் என்று சட்டமன்றப் பேரவையில் அறிவித்தது தொடர்பாக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப்பதிவு வருமாறு:-

கும்பகோணத்தில் அமைகிறது 'கலைஞர் பல்கலைக் கழகம்'!

போராடிக் கல்விச் சாலைக்குள் காலடி எடுத்து வைத்த நாம், உயர்கல்வியில் உயர உயரப் பறக்கிறோம்! நானிலமெங்கும் தமிழ்நாட்டினர் உயர் பொறுப்புகளில் பணியாற்றுகிறோம்!

இந்தப் பெருமைகளுக்கு அடித்தளமிட்ட முத்தமிழறிஞர் கலைஞர் செய்த சாதனைகளில் சில:

- **பள்ளிகளில் தமிழ்க் கட்டாயப் பாடம்**
- **ஆரம்பப் பள்ளிகளில் பெண் ஆசிரியைகள் நியமனம்**
- **வாரத்தில் ஐந்து நாட்கள் முட்டை என உண்மையான சத்துணவு**
- **தமிழில் படித்த மாணவர்களுக்கு வேலை வாய்ப்பில் முன்னுரிமை**
- **முதல் தலைமுறைப் பட்டதாரி மாணவர்களுக்குக் கல்விக் கட்டணச் சலுகை**
- **தேர்வு முறையில் செமஸ்டர் முறை அறிமுகம்**
- **தமிழ் வழியில் பொறியியல் படிப்பு**
- **இலவச பஸ் பாஸ்**
- **இந்தியாவிலேயே முதன்முதலாகப் பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் கணினிப் பாடம் அறிமுகம்**
- **பொறியியல் படிப்புக்கான நுழைவுத் தேர்வு நீக்கம்**
- **மாவட்டந்தோறும் மருத்துவக் கல்லூரிகள்**
- **பள்ளிக்கல்வி மற்றும் உயர்கல்விக்குத் தனித் தனி துறைகள் மற்றும் அமைச்சகங்கள்,**
- **அண்ணா நூற்றாண்டு நூலகம், உள்ளிட்ட ஏராளமான திட்டங்களை உருவாக்கி,**
- **கோவை பாரதியார் பல்கலைக்கழகம்**
- **திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழகம்**
- **நெல்லை மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்**
- **சேலம் பெரியார் பல்கலைக்கழகம்**
- **கோவை வேளாண்மை அறிவியல் பல்கலைக்கழகம்**
- **சென்னை அண்ணா தொழில்நுட்ப அறிவியல் பல்கலைக்கழகம்**
- **டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகம்**
- **டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம்**
- **உலகத் தமிழ் இணையப் பல்கலைக்கழகம்**
- **தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம் ஒன்றிய அரசை வலியுறுத்தி**
- **திருவாரூரில் தமிழ்நாடு மத்தியப் பல்கலைக்கழகம்,**
- **திருச்சியில் இந்திய மேலாண்மைக் கல்வி நிறுவனம்**

- என நீளும் இந்தப் பட்டியலால் நவீனத் தமிழ்நாட்டை உருவாக்கிய தலைவர் கலைஞர் தமிழ்நாட்டு மக்களின் உயர்வில் என்றும் வாழ்வார்!.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.

### முரசொலி வளாகத்தில் முரசொலி செல்வத்திற்கு சிலை!

# சிலை வைத்தவரும் - சிலையாக இருப்பவரும் என்றென்றும் நன்றிக்குரியவர்கள்!

**கோவி.லெனின்**
கழக தகவல் தொழில் நுட்ப அணி ஆலோசகர்!



**சிலந்தி** – இந்தப் பெயரில் வெளியான கட்டுரைகளைப் படித்த முரசொலி வாசகர்கள் பலருக்கே அது ஆசிரியர் முரசொலி செல்வம் அவர்களின் புனைப் பெயர் என்பது தெரியாது. கொள்கை சார்ந்த பத்திரிகையாளனுக்கு தன்னுடைய பெயர், படம் இவற்றைவிட தன் இயக்கத்தின் கருத்துகளை எழுத்துகளில் கொடுப்பதுதான் முதன்மையானது. பத்திரிகைதான் அவனுடைய முகமும் முகவரியும். அதை மிகச் சரியாகக் கடைப்பிடித்தவர் முரசொலி செல்வம் அவர்கள்.

அவருடைய எழுத்துகளில் உருவான 'சிலந்தி' வலை அரசியல் எதிரிகள் பலரை சிக்க வைத்திருக்கிறது. சிக்கலானப் பிரச்சினைகளிலிருந்து தி.மு.க.வைக் காப்பாற்றியிருக்கிறது. அதில் மிக முதன்மையானது, ராஜீவ் காந்தி படுகொலை. அந்த கொலைப் பழியைத் தி.மு.க மீது ஜெயலலிதாவும் வாழப்பாடியும் போட்டு அரசியல் ஆதாயம் தேடிய நிலையில், ராஜீவ் கொலையில் சம்பந்தப்பட்டவர்கள் யார் என்பதையும், அதை காவல்துறையும் மத்திய புலனாய்வு நிறுவனங்களும் மறைப்பதையும் புகைப்பட ஆதாரங்களுடன் முரசொலியின் ஆசிரியராக அவர் வெளியிட்ட பிறகுதான், கொலையில் தொடர்புடைய ஒற்றைக் கண் சிவராசன் என்கிற முக்கிய கேரக்டர் வெளியே தெரிய வந்தது. அதன் சங்கிலித் தொடராக ஒட்டுமொத்த சதியின் பின்னணியும் அம்பலமானது.

ராஜீவ்காந்தி படுகொலையில் தி.மு.க.வுக்குத் துளியும் சம்பந்தமில்லை என்பது சட்டப்பூர்வமாகவும், மக்கள் மன்றத்திலும் நிரூபிக்க முடிந்ததற்கு முதல் முன்னெடுப்பு, முரசொலி செல்வம் அவர்களின் கட்டுரை. இதற்கான காலமும், கழகம் கொடுத்த விலையும் கொஞ்சமல்ல. எனினும், தி.மு.க தன் மீதான பொய்க் குற்றச்சாட்டுகளை பொடிப்பொடியாக்க வேறெந்த ஊடகத்தையும் நம்ப வேண்டாம். தி.மு.க.வாலேயே முடியும் என்பதற்கான சான்றாக அது அமைந்தது. 2ஜி வரை அதுதான் நடந்தது. இப்போதும் தொடர்கிறது.

பாசிசத்தில் மோடிக்கு சகோதரியான ஜெயலலிதா, தன்னுடைய ஆட்சியில் முரசொலிக்கு எதிராக சட்டமன்றத்தில் கூண்டு கொண்டு வந்து, அதில் முரசொலி செல்வத்தை ஏற்றி விசாரிக்கச் செய்தார். அப்போதும் எதேச்சதிகாரத்தை எதிர்த்து நின்றார் செல்வம். "கூண்டு கண்டேன் குதூகலம் கொண்டேன்" என்று அவரை வார்த்தெடுத்த கலைஞர் தன் உடன்பிறப்புகளுக்கு கடிதம் எழுதினார்.




தன்னை வெளிப்படுத்திக் கொள்ளாமல், தனக்கு அடுத்தடுத்த தலைமுறையைச் சேர்ந்த திராவிட இயக்க எழுத்தாளர்களின் படைப்புகளை சமூக வலைத்தளப் பதிவுகளைத் தேடித் தேடிக் கண்டறிந்து அவர்களின் எழுத்துகளை முரசொலியில் பதிவு செய்தவர் முரசொலி செல்வம். கலைஞரும் முரசொலி மாறனும் செல்வம் என்ற படைக்கலனை உருவாக்கித் தந்தனர். அந்தப் படைக்கலனே பாசறையாகி, பல கருத்தாயுதங்களைக் கூர் தீட்டி, கழகத்திற்குத் தந்திருக்கிறது.

முரசொலி ஆசிரியர் செல்வத்திற்கு முரசொலி அலுவலக வளாகத்தில் சிலை அமைத்திருக்கிறார் கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்கள். சிலை வைத்தவரும் சிலையாக இருப்பவரும் என்றென்றும் நன்றிக்குரியவர்கள்.

### ஜம்மு-காஷ்மீரில் தாக்குதலுக்கு உள்ளாகி - டெல்லி எய்ம்ஸ் மருத்துவமனையில் சிகிச்சை பெறும்

# டாக்டர் பரமேஸ்வரன் உடல் நிலை குறித்து - அவரது மனைவியிடம் தொலைபேசியில் விசாரிப்பு!

### ''தேவைப்படும் உதவிகள் வழங்கப்படும்'' – முதல்வர் மு.க.ஸ்டாலின் உறுதி!

சென்னை, ஏப்.26-

ஜம்மு-காஷ்மீரில் தீவிரவாதிகளால் தாக்குதலுக்கு உள்ளாகி டெல்லி எய்ம்ஸ் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் டாக்டர் பரமேஸ்வரன் அவர்களின் உடல்நலம் குறித்து அவரது மனைவி டாக்டர் நயன்தாரா அவர்களிடம் தொலைபேசி வாயிலாக விசாரித்து தேவைப்படும் அனைத்து உதவிகளும் வழங்கப்படும் என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.

ஜம்மு - காஷ்மீர் மாநிலத்தில் உள்ள பெஹல்காமில் அப்பாவி சுற்றுலாப் பயணிகள் மீது 22.4.2025 அன்று நடத்தப்பட்ட மனிதாபிமான மற்ற, பயங்கரவாத தாக்குதலில் தமிழ்நாட்டைச் சேர்ந்த சிலரும் பாதிக்கப் பட்டுள்ளனர் என்ற தகவல் கிடைத்தவுடன் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உடனடியாக டெல்லியில் உள்ள தமிழ்நாடு இல்லத்தில் 24 மணி நேரமும் செயல்படும் சிறப்பு உதவி மையம் தொடங்குவதற்கு உத்தரவிட்டு, அதன்படி உதவி மையம் செயல்பட்டு வருகிறது.

மேலும், காஷ்மீர் மாநில அரசுடன் இணைந்து பணியாற்றி, பாதிக்கப்பட்டுள்ள குடும்பங்களுக்கு உரிய உதவிகளை செய்திட புதுக்கோட்டை மாவட்டத்தில் பணியாற்றி வரும் கூடுதல் ஆட்சியர் அப்தாப் ரசூல், நேரடியாக ஜம்மு -காஷ்மீர், பஹல்காம் பகுதிக்குச் சென்று ஒருங்கிணைப்புப் பணிகளை மேற்கொள்ள உத்தரவிடப்பட்டு, அவர் அப்பணிகளை மேற்கொண்டு வருகிறார்.

**சுற்றுலாப் பயணி டாக்டர் பரமேஸ்வரன்**

இத்தாக்குதலில் பாதிக்கப்பட்ட தமிழ்நாட்டைச் சேர்ந்த சுற்றுலாப் பயணி டாக்டர் பரமேஸ்வரன் அவர்களுக்கு அம்மாநிலத்தில் தேவையான சிகிச்சை அளிக்கப்பட்டது. பின்னர் மேல் சிகிச்சைக்காக ஏர் ஆம்புலன்ஸ் மூலம் நேற்று முன்தினம் (24.4.2025) மதியம் தில்லி வந்தடைந்த அவரை, தமிழ்நாடு அரசின் தில்லி சிறப்பு பிரதிநிதி ஏ.கே.எஸ். விஜயன், தமிழ்நாடு இல்ல உறைவிட ஆணையர் ஆஷிஷ் குமார் ஆகியோர் எய்ம்ஸ் மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றனர். தற்போது அவருக்கு அங்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

முதலமைச்சர் அவர்கள் நேற்று முன்தினம் (24.4.2025) டாக்டர் பரமேஸ்வரன் அவர்களின் மனைவி டாக்டர் நயன்தாராவை தொலைபேசி வாயிலாக தொடர்பு கொண்டு, அவரது கணவரின் உடல்நிலை குறித்தும், அவருக்கு அளிக்கப்பட்டு வரும் சிகிச்சை விவரங்கள் குறித்தும் கேட்டறிந்து, தமிழ்நாடு அரசு மூலம் தேவைப்படும் அனைத்து உதவிகளும் செய்யப்படும் என்று உறுதி அளித்தார். முதலமைச்சர் அவர்களின் துரிதமான நடவடிக்கைக்கு டாக்டர் நயன்தாரா அவர்கள் நன்றி தெரிவித்துக் கொண்டார்.

ஜம்மு - காஷ்மீர் மாநிலத்திற்கு சுற்றுலா சென்ற தமிழ்நாட்டைச் சேர்ந்த 40 நபர்கள் தில்லி தமிழ்நாடு இல்லத்திற்கு அழைத்து வரப்பட்டு நேற்று இரயில் மூலம் சென்னைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். மேலும், ஜம்மு - காஷ்மீர் மாநிலத்திற்கு சுற்றுலா சென்றுள்ள தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்களை அழைத்து வரும் பணிகள் முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.



தர்மபுரி கிழக்கு மாவட்ட தி.மு.க. மாணவரணி அமைப்பாளர் என்.பி.பெரியண்ணன் தலைமையில் நீட் தேர்வு கொண்டு வந்த ஒன்றிய பாசிச பா.ஜ.க. அரசோடு கூட்டணி வைத்துள்ள அ.தி.மு.க.வின் முகத்திரையைக் கிழிக்கும் வகையில்,தர்மபுரி அரசு கலைக் கல்லூரி மாணவ, மாணவிகளிடம் விழிப்புணர்வு துண்டுப் பிரசுரங்கள் வழங்கப்பட்டது.நிகழ்வில் ஒன்றிய செயலாளர்கள் ஏ.எஸ்.சண்முகம், டி.எல்.காவேரி, மாவட்ட துணைச் செயலாளர் ஆறுமுகம், மாணவரணி மாவட்ட துணை அமைப்பாளர்கள் கௌதம், அன்பரசு, அணிகளின் துணை அமைப்பாளர்கள் உதயசூரியன், இளங்கவி, சூர்யா, பார்த்திபன், தன்வீர், சுமன் உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### தமிழ்நாட்டிலேயே திருவள்ளூர் மாவட்டத்தில்தான்

# 4 வழிச்சாலையை அதிகமாக அமைத்துக் கொண்டிருக்கிறோம்!

### பேரவையில் உறுப்பினர் ஆ.கிருஷ்ணசாமி கேள்விக்கு அமைச்சர் எ.வ.வேலு பதில்!

**சென்னை, ஏப். 26-**

**சட்டப்பேரவையில் கேள்வி நேரத்தின் போது உறுப்பினர் ஆ.கிருஷ்ண சாமி கேட்ட கேள்விக்கு அமைச்சர் எ.வ.வேலு பதிலளிக்கையில் தமிழ்நாட்டிலேயே திருவள்ளூர் மாவட்டத்தில் தான் 4 வழிச்சாலையை அதிகமாக அமைத்துக் கொண்டிருக்கிறோம் என்று பெருமிதத்துடன் குறிப்பிட்டார்.**



இது குறித்து நடைபெற்ற விவாதம் வருமாறு:-

**ஆ. கிருஷ்ணசாமி:** பூந்தமல்லி தொகுதி, நசரத்பேட்டை-திருமழிசை தேசிய நெடுஞ்சாலை சந்திப்பில் மேம்பாலம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

**அமைச்சர் எ.வ. வேலு:** பூந்தமல்லி தொகுதி, நசரத்பேட்டை-திருமழிசை தேசிய நெடுஞ்சாலை சந்திப்பில், மேம்பாலம் கட்டுவதற்குரிய சாத்தியக்கூறு ஆராய்ந்து அதற்கு DPR தயார் செய்யப்பட்டுக் கொண்டிருக்கிறது.

**ஆ. கிருஷ்ணசாமி:** திருவள்ளூர் மாவட்டத்திற்கு முதலமைச்சர் அவர்கள் வருகை தந்த போது, திருமழிசை ஊத்துக்கோட்டை சாலைக்கு ரூ.51 கோடி செலவில், விரிவாக்கம் செய்யப்படும் என்று அறிவிப்புத் தந்த முதலமைச்சர் அவர்களுக்கும், துறையின் அமைச்சர் அவர்களுக்கும் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இன்றைக்கு நம்முடைய அமைச்சர் அவர்களுடைய பதில் திருப்தியாக இருக்கிறது. நம்முடைய பேட்டை, திருமழிசை 2 சந்திப்பும் மிகவும் முக்கியமான சந்திப்பு. 6 வழி சாலையாக ஆக்கப்பட்டதற்கு பின்னாலே ஓரளவிற்கு போக்குவரத்து நெரிசல் குறைந்திருக்கிறது என்றாலும்கூட, பேட்டை சந்திப்பில் அக்கிரமேல், மேப்பூர் பேன்ற கிராமங்கள் இருக்கக்கூடியவர்கள், பாதசாரியாக கடந்து வருகிறார்கள். இரு சக்கர வாகனங்கள் ஆயிரக்கணக்கன அளவிலே கடந்து போகிறது. அங்கே 10 ஆண்டு காலத்திற்கு முன்னதாக டி.ஆர். பாலு அமைச்சராக இருந்தபோதுக்கூட அந்தச் சந்திப்பு மிகவும் விபத்துக்குள்ளாகிறச் சந்திப்பு என்பதற்காக ஒரு UNDERPASS கட்ட வேண்டுமென்று அறிவுத்துவிட்டுச் சென்றார்கள்.

அந்தப் பகுதிக்கு அமைச்சர் அவர்கள் ஒரு UNDERPASS ஒரு சுரங்கப் பாதையோ, அல்லது மேம்பாலமோ கட்டித் தரப்பட பேண்டும். ஏனென்றுச் சொன்னால், நம்முடைய துணை முதலமைச்சர் அவர்கள்கூட அந்தப் பகுதியிலே வந்து ஆய்வுச் செய்து, செம்பரம்பாக்கம் பகுதியிலே 150 ஏக்கரிலே ஒரு CINEMA CITY அமைப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். எனவே, எதிர்காலத்தில் போக்குவரத்து நெரிசல் அதிகமாக இருக்கிறக் காரணத்தினால், அங்கு ஒரு மேம்பலமோ, UNDER PASS-ஐயோ கட்டித் தர வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.

**அமைச்சர் எ.வ. வேலு:** சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் கூறிய சாலை என்பது இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்திற்குச் சொந்தமானச் சாலை. அது உறுப்பினர் அவர்களுக்கே தெரியும். சென்னை-பெங்களூர் செல்கிற அந்தச் சாலை என்பது 2021-2022-ன்கீழ் மதுரவாயல் முதல் ஸ்ரீ பெரம்பத்தூர் சுங்கச்சாவடி வரை 23 கி.மீ. நீளத்திற்கு சேவைச் சாலையுடன்கூடிய 6 வழிச் சாலையை விரிவாக்கம் செய்ய ரூ. 495 கோடி பணம் ஒதுக்கப்பட்டு தேசிய நெடுஞ்சாலையின் மூலமாக அந்தப் பணிகள் நிறைவுப்பெற்றிருக்கிறது. பாரிவாக்கம், திருமழிசை, தண்டலம் பகுதியிலே மேம்பாலம் மற்றும் தசரதப்பேட்டையிலே கனரக வாகனச் சுரங்கப்பாதை அமைக்க பணிகள் உள்ளடக்கிய தாகத்தான் முதன் முதலாக திட்டம் தீட்டப்பட்டது.

அதற்கு பின்னால் மதுரவாயல் முதல் ஸ்ரீபெரம்பத்தூர் வரை சென்னை வெளிவட்டச் சாலை ஓரார் 8 கி.மீ. நீளத்திற்கு உயர்மட்டச் சாலை மேம்பாலம் அமைக்க ரூ.1,400 கோடி மதிப்பீடு தயார் செய்து ஒன்றிய அரசினுடைய பரிசீலனையில் இப்போது இருக்கிறது. எனவே, அது பரிசீலனைச் செய்தப் பின்பு, ஒன்றிய அரசிடத்திலே ஒரு அழுத்தம் கொடுத்து அவர் சொல்லுகிற அந்த மேம்பாலத்தைக் கட்டுவதற்கு அரசு முன்னுரிமை அளிக்கும்.

**ஆ. கிருஷ்ணசாமி:** அமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து, என்னுடைய பூந்தமல்லி தொகுதியில் பாரிவாக்கம் பட்டாபிராம் சாலை, மிகவும் வளர்ந்து வரக்கூடிய சாலையாக, இன்றைக்கு குடியிருப்பு பகுதிகள், தொழிற்சாலைகள் பெருகி வருகின்றன. அது மட்டுமல்லாமல், நிறைய WAREHOUSE கிடங்குகள் கட்டக்கூடிய ஒரு சாலையாக பெருகி வருகிறக் காரணத்தால், கனரக வாகனங்கள் அதிகமாக செல்லுகிற அந்தப் பாதை இரு வழிச் சாலையாக இருக்கிறது. அந்த பட்டாபிராம் பாரிவாக்கம் செல்லுகிற சாலையை 4 வழிச் சாலையாக அமைச்சர் அவர்கள் அமைத்துத் தர முடியுமா என்றுத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**அமைச்சர் எ.வ. வேலு:** எனக்கு தெரிந்து தமிழ்நாட்டிலேயே திருவள்ளூர் மாவட்டத்தில்தான், முதலமைச்சர் சாலை மேம்பாட்டுத் திட்டமான 4 வழிச் சாலை அதிகமாக நாங்கள் போட்டுக் கொண்டிருக்கிறோம். ஆனால், உறுப்பினர் அவர்கள் சொல்லுகிறச் சாலை 4 வழிச் சாலைக்குரிய போக்குவரத்துச் செறிவு இருக்குமேயானால், நிலையெடுப்பு என்பது குறைவாக இருக்குமேயானால், முதலமைச்சர் அவர்களிடம் கலந்து பேசி, இந்த ஆண்டே அந்தச் சாலைப் பகுதி எடுத்துக்கொள்வதற்கு அரசு முன்னுரிமையளிக்கும்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.